மதுரை, செயற் பொறியாளர் (வே.பொ)(பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு.எம்.முரேஷ்குமார் பி.இ.,(விவ)

*****

ந.அ / 315 / 2020

நாள்.17.02.2020.

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி (4)ல் அடங்கிய பணிகள் - 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டில் தற்காலிகமாக தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டது - செல்வி.க.கார்த்திகா அவர்களுக்கு தட்டச்சர் பணிநியமனம் வழங்கியது - பணியினை வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1692/PSD-A/2019, நாள் 20.02.2019.
2) சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக, வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி3/ 7551 / 2019 நாள் 01.03.2019.
3) தலைமைப் பொறியாளர் (வே.பொ.) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/7748/2019 நாள் 06.03.2019.
4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ/1011/2019 நாள்.14.03.2019.
5) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் கடித எண்.அப3/29243/2019, நாள்.20.08.2019.
6) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.அபபி3/95057/2019, நாள்.02.08.2019.
7) உதவி செயற்பொறியாளர்(வே.பொ), சிறப்புப் பகுதி மேண்மைத் திட்டம், மதுரை அவர்களின் கடித எண்.அ/121/2019, நாள்.23.01.2020.

---

**ஆணைகள்:-**

பார்வை 1 ல் காணும் கடிதம் மற்றும் 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 4-ல் அடங்கிய பணிகளில் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டு நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் தற்காலிகமாக தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.க.கார்த்திகா அவர்களுக்கு பார்வை 3-ல் காணும் தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையினைத் தொடர்ந்து பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி தட்டச்சர் ஆக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), சிறப்புப் பகுதி மேண்மைத் திட்டம், மதுரை அலுவலகத்திற்கு பணிநியமனம் வழங்கப்பட்டு 15.03.2019 முற்பகல் முதல் அவ்வலுவலகத்தில் தட்டச்சர் ஆக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

செல்வி.க.கார்த்திகா, தட்டச்சர் அவர்களின் பணியினை வரன்முறை செய்திட பார்வை 7-ல் காணும் கடிதத்தின்படி வரப்பெற்ற கருத்துரு மற்றும் சான்றுகளின் அடிப்படையில் தனியரின் பணிப்பதிவேடு மற்றும் பணி ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது.

பார்வை 5-ல் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட, பார்வை 6-ல் காணும் வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தட்டச்சர் பணியினை சம்பந்தப்பட்ட பணி நியமனம் வழங்கிய அலுவலரே வரன்முறை செய்து உத்திரவு வழங்கலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து செல்வி.க.கார்த்திகா, தட்டச்சர் அவர்கள் முதன் முதலில் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 15.03.2010 முற்பகல் அன்று கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the W.P's pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined civil services examination-IV for the year 2015-16, 2016-17 & 2017-18 recruitment".

இவருக்கு மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

செயற்பொறியாளர் (வே.பொ)(பொ)
மதுரை-11.

17/2/2020

பெறுநர்:
செல்வி.க.கார்த்திகா
தட்டச்சர்.

மூலம் மற்றும் நகல் : உதவி செயற்பொறியாளர் (வே.பொ),
சிறப்புப் பகுதி மேன்மைத் திட்டம்,
மதுரை.

- பணியாளரின் பணிப்பதிவேடு (1 பவுண்ட் வால்யூம்), பதிவுறுத்தாள் (1 எண்) ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனைப் பெற்றுக் கொண்டமைக்கா ஒப்புதலை வழங்கியும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் செய்த விபரத்தினை தெரிவிக்கவு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : மேற்குறித்தபடி.

நகல் : பணிப்பதிவேடு / இருப்புக் கோப்பு.

உபரி.